தமிழீழ விடுதலைப் புலிகள்
**Liberation Tigers of Tamil Eelam**

30.04.1986. ஜெர்மனி கிளை

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான மோதல் பற்றிய அறிக்கை.

கடந்த 25.04.86 வெள்ளிக்கிழமையன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்களக்கடற்படைக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றின்போது எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான மேஜர் அருணா என்பவர் வீரமரணமடைந்துள்ளார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம். இவரின் மறைவையடுத்து, மறுநாள் யாழ்-குடாநாடெங்கும் பொதுமக்கள் கடைகள், நிறுவனங்கள் அனைத்தையும் மூடி, துக்கதினம் அனுஷ்டித்து மறைந்த எமது மேஜருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். இது இவ்வாறிருக்க, மேற்படி சம்பவத்திற்கு முதல்நாளன்று 'ரெலோ' இயக்கத்தினரின் படகொன்று சிங்களக்கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி அதிற்சென்றவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, இறந்த தமது இயக்கத்தினருக்குத் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொதுமக்களை 'ரெலோ' இயக்கத்தினர் கேட்டுக்கொண்டனர். ஆனால், ரெலோ இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைகள், கொலைகள் போன்ற அடாவடித்தனங்கள் காரணமாக வெறுப்படைந்திருந்த பொதுமக்கள் துக்கதினம் அனுஷ்டிக்க மறுத்துவிட்டனர். அதன்பின்னர் நடைபெற்ற எமது வீரரின் மறைவுக்கு, பொதுமக்கள் பூரண ஆதரவுடன் கடைகளை அடைத்துத் துக்கதினம் அனுஷ்டித்ததனைக் கண்டு கொதிப்படைந்த ரெலோ இயக்கத்தினர்; கடைகளைத் திறக்குமாறு வர்த்தகர்களையும், பொதுமக்களையும் தாக்கி, பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனையறிந்து பாதிப்படைந்த பொதுமக்களை எமது முக்கிய உறுப்பினர்களாகிய பீர்காந்தா, முரளி என்போர் அணுகி, அவர்களைத் ஆறுதல் கூறி சமாதானம் மேற்கொள்கின்ற வேளையில், இருவரும் 'ரெலோ' இயக்க வெறியர்களால் கோழைத்தனமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதனின் நிலைமையை விளக்கி, கடத்தப்பட்ட எமது வீரர்களின் விடுவிக்கும் நோக்குடன் எமது இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான கிட்டு என்பவர் 'ரெலோ' இயக்கத்தினரை அணுகி, அவர்களுடன் சமாதான முயற்சிக்குச் சென்றபோது எமது தளபதியை மிகவும் அநாகரிகமான முறையில் சுட்டுக்கொன்றனர். இறுதியில், கடத்தப்பட்ட எமது வீரர்களை விடுவிக்கவும்; 'ரெலோ' வினரின் தொடர்ச்செயல்களுக்கு முடிவுகட்டுமாறு பொது மக்கள் எம் இயக்கத்தினரை வேண்டிக்கொண்டதற்கிணங்கவும்; ரெலோவினர் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். எமது வீரர்கள் பொதுமக்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் தமிழீழமெங்குமுள்ள 'ரெலோ' இயக்க முகாம்களைச் சுற்றிவளைத்து தாக்குதல் மேற்கொண்டனர். நேற்றும், இன்றும் தொடர்ந்த இத்தாக்குதலின்போது, கொட்டடியிலுள்ள ஒரு முகாமைத் தவிர, ஏனைய பகுதிகளிலுள்ள முகாம்களிலிருந்த ரெலோவினர் அனைவரும் ஆயுதங்களுடன் சரணடைந்துள்ளதுடன், கடத்தப்பட்ட எமது முக்கிய உறுப்பினர்கள் இருவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இவ்வேளை, எமது வேண்டுகோள் ஏற்க மறுத்து எதிர்த்தாக்குதலில் ஈடுபட்ட 'ரெலோ' உறுப்பினர்கள் பலர் இறந்து பலியாகியுள்ளனர். முழுவதும் ரெலோவினரின் பொறுப்பற்றதும், கண்மூடித்தனமுமான நடவடிக்கைகளின் விளைவாகவே நடைபெற்ற மேற்படி துர்ப்பாக்கிய சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளாகிய நாங்கள் மிகவும் மனம்வருந்துகின்றோம்.

ரெலோவின் இத்தகைய கடத்தல் நாடகங்கள் அண்மையில் இந்தியாவிலும் நடந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது, திருச்சி மாவட்டத்தில் அகதிகளாகவிருந்த மூன்று இளைஞர்களைக் கடத்திச்சென்று, ஒருவரை அடித்துக் கொன்றுள்ளனர்.

விஷமத்தனமான பிரச்சாரங்களை முற்றாக மறுக்கின்றோம். ரெலோ இயக்கத்தின் தலைவர், ஸ்ரீ சபாரத்தினத்தைக் கொல்லுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர், போராளிகளைப் பணித்துள்ளதாக ஸ்ரீலங்கா அரசும், இந்திய சக்திகளும் மேற்கொள்ளும் பிரச்சாரத்தை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

<u>புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!</u>

பிரச்சார வெளியீட்டு வாரியம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
ஜேர்மன் கிளை.

30-04-1986.